O.S.No. 91/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 09.01.2026

DW2:ரெங்கராஜ் த/பெ– கிருஷ்ணசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

தபசில் சொத்தில் எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி நாராயணனின் நிரந்தர முகவரி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது,சென்னையில் வசித்து வருகிறார். அடிக்கடி நாங்கள் சந்தித்து கொள்வோம். 12 ஆண்டுகளாக அவரை எனக்கு தெரியும். நில புரோக்கர் தொழிலை நான் 37 வருடமாக செய்து வருகிறேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு எது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என நாராயணனை கேட்டேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. தபசில் சொத்து சம்மந்தமாக தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. தபசில் சொத்து 4 கைகள் மாறி வந்தது. எந்த தேதியில் யார் யாருக்கு தபசில் சொத்து மாறியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது விபரத்தை நான் படித்து பார்க்கவில்லை. எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்றும், ஏற்கனவே தயார் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து பெற்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி நாராயணனுக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.